**செய்தி வெளியீடு எண்:223** **நாள்:04.06.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (4.6.2021) தலைமைச் செயலகத்தில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பையில் உள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய கட்டடத்தில் 300 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இதன்மூலம், கோம்பை, சின்னமனூர் மற்றும் கம்பம் ஆகிய பகுதியில் உள்ள மக்கள் இம்மையத்தில் கொரோனா தொற்றுக்கான சிகிச்சை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மையத்தில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கு தேவையான ஆக்சிஜன் செறிவூட்டிகளும் வழங்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், ஆக்சிஜன் வசதியுடன் 631 படுக்கைகளும், 422 சாதாரண படுக்கைகளும், 70 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகளும், என மொத்தம் 1123 படுக்கை வசதிகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் 6 அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 6 கொரோனா சிகிச்சை மையங்கள் மற்றும் 8 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1525 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, மன அழுத்தத்தை குறைப்பதற்கான மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களும், தேனியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என். ராமகிருஷ்ணன், திரு. ஏ. மகாராஜன், திரு. எஸ். சரவணகுமார், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ழ. கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**